O.S.No.91/2023 தேதி – 24.10.2025

வா.சா.2. – அசன் சிக்கந்தர் அலி

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

கடந்த 24.09.2025 அன்று எனது தரப்பில் 3 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நான் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமான விசாரணை பற்றி சம்பவ இடத்தினை நான் பார்வையிட்டேனா என்றால் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. எனக்கு நேரடியாக தெரியாது. ஆய்வாளர்தான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டார். இறந்தபோன முனியசாமி இறந்ததாக சொல்லப்படும் இடம் மரங்கள் இல்லாத வயல்வெளி என்றால் உழுதுபோட்ட இடத்தில் இறந்து கிடந்தார். பார்வை மகஜர் வரைபடப்படி முனியசாமி இறந்து கிடந்த இடத்தில் மரங்கள் இல்லை என்றால் சரிதான். 24.09.2025 அன்று நான் சாட்சியம் அளிக்கும்போது குற்றப்பத்திரிக்கை நகலில் 1ம் பிரதிவாதி தனது தோட்டத்தில் G.I வயர்களை தோட்டம் முழுவதும் கட்டி வைத்து மின்சாரத்தை பாய்ச்சி இருந்து, அதை தொட்டதால்தான் முனியசாமி என்பவர் இறந்ததாக 1ம் பிரதிவாதி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று நான் குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில் அவ்வாறு சாட்சி கூறியுள்ளேன். இவ்வழக்கின் புகார்தாரர் தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்தின் அந்த பகுதியில் சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர். அவர் ஒரு அரசு ஊழியர் என்பதால் மின்சாரத் துறையில் ஏற்பட்ட தவறை மறைப்பதற்காக, அவர் பொய்யாக கொடுத்த புகாரில், அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் 13 வது வரியில் சர்வீஸ் எண். 233–012–355 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மீட்டர் பாக்ஸ் பொருத்தப்பட்டிருந்த போஸ்டில் தகர

பாக்சில் உள்ள மரக்கட்டையில் 355 என்று எழுதப்பட்டுள்ளதா அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் உள்ள பார்வைமகஜர் வரைபடத்தில் மின்சார போஸ்ட் அருகில் எஸ்.சி.355 என்று எழுதப்பட்டடுள்ளதா என்றால் சரிதான். முனியசாமி இறந்தகிடந்த உழுதுபோட்ட வயலில் நடுப்பகுதியில் ஒரு போஸ்ட் மரம் உள்ளது என்றால் சரிதான். எனது வரைப்படப்படி எஸ்.சி.355 என்று எழுதப்பட்ட போஸ்ட் மரத்தில் இழுவை கம்பி உள்ளதா என்றால் ஆவணத்தில் இல்லை. எஸ்.சி.355 என்று எழுதப்பட்ட போஸ்டில் ஒரு இழுவைக் கம்பி இருந்தது என்றும், அந்த இழுவைக்கம்பியில் இருந்துதான் மின்சாரம் கசிந்து முனியசாமி என்பவர் இறந்தார் என்றும், மின்சாரத் துறைக்கு உதவி செய்வதற்காக என்னுடைய பார்வை மகஜர் வரைபடத்தில் மறைக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இழுவைக் கம்பியை மறைத்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பார்வைமகஜரில் உள்ள வரைபடத்தில் மேற்கு பக்கம், வடக்கு பக்கம், கிழக்கு பக்கம் தான் மரங்கள் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாதிக்கு உதவி செய்ய வேண்டும் என்றும், மின்சார துறைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.